விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 2? யாழ்ப்பாணம் | ஐப்பசி 9 | துல்ஹஜ் 26 ஞாயிற்றுக்கிழமை | இதழ் 253 25-10-1981

## 'நான்தான் உமாமகேஸ்வரன் பொலிசார் பிடித்துப் பார்க்கட்டும்'
### கிளிநொச்சிக் கொள்ளையர்களில் ஒருவர் இப்படிக் கூறிவிட்டுச் சென்றாராம்

(கிளிநொச்சி)

"நான் தான் உமாமகேஸ்வரன். முடியுமானால் பொலிசார் எம்மைப் பிடித்துப்பார்க்கட்டும்"

இவ்வாறு கிளிநொச்சி மக்கள் வங்கியில் கொள்ளையடித்தவர்களில் ஒருவர் தம்மிடம் தெரிந்ததாக பிரஸ்தாபக்கிளையின் உதவி மனேஜர் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

வங்கியின் முக்கிய இடங்களில் எல்லாம் எமது கைரேகைகளைப் பதிந்துவிட்டுச் செல்கிறோம் என்றும் கொள்ளையர்கள் தம்மிடம் கூறிச்சென்றதாகவும் வங்கி உதவி முகாமையாளர் திரு. செல்வ பத்மநாதன் பொலிசாரிடம் தெரிவித்தார்.

இதேவேளையில், கொள்ளையடிக்கப்பட்ட வங்கிக்கு அண்மையில் டைனமட் ஒன்றையும் தலையில் பொருத்தும் பட்டறியில் இயங்கும் லைட் ஒன்றையும் கயிறு ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இக்கொள்ளையில் சுமார் 25 பேர் ஈடுபட்டிருக்கலாம் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலை பற்றி

# கூட்டணி எம். பி.க்கள் இன்று ஆராய்கிறார்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் இன்றைய நிலை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்கள் இன்று யாழ்ப்பாணத்தில் கூடி ஆராயவிருக்கின்றனர்.

நல்லூர் தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம் சிவசிதம்பரம் தலைமையில இக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

யாழ் மாவட்ட எம் பிக்களான திருவாளர்கள் வெ. யோகேஸ்வரன், வே. துரைரத்தினம், பண்டிதர் கா பொ இரத்தினம், வி என் நவரத்தினம், யாழ் மாவட்ட சபைத் தலைவர் திரு எஸ் நடராசா ஆகியோர் கலந்துகொள்வர்.

### பாராளுமன்றக்குழு இன்று கூடாது

தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்றக்குழுக்கூட்டம் இன்று கொழும்பில நடைபெறமாட்டாது.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நாடு திரும்பாததால் இக்கூட்டம் நடைபெறவில்லை.

பாராளுமன்ற பகிஷ்கரிப்பு தொடருமென கூட்டணியின் நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

### ஜனாதிபதியுடன் நவ. 2ல் ஆலோசனை

ஜனாதிபதி-தமிழர் விடுதலைக் கூட்டணி உயர்மட்ட மகாநாடு நவம்பர் 2ம் திகதி நடைபெறவிருக்கிறது. யா

### கொலையுண்ட படையினருக்கு தமிழர் நிதி

(கொழும்பு)

வடபகுதியில் வன்செயல்களினால் உயிரிழந்த ஆயுதப்படையினரின் குடும்பங்களுக்கு உதவும் முகமாக கொழும்பிலுள்ள தமிழ் பிரஜைகள் குழுவொன்று நிதியொன்றை சேகரித்து வழங்க முன்வந்துள்ளது.

இக்குழுவினர் இன்று ராணுவத்தளபதியை அவரது காரியாலயத்தில் சந்தித்து 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையொன்றை கையளிக்கவிருக்கின்றனர். இதே போன்று பொலிஸ்மா அதிபரிடமும் இவர்கள் நிதியொன்றை கையளிக்கவிருக்கின்றனர்.

## மகாராணியைக் கவர்ந்த விக்டோரியாத் திட்டம்!

(கண்டி)

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் ஒருபகுதியான விக்டோரியா திட்டம் எலிஸபெத் மகாராணியை வெகுவாகக் கவர்ந்துவிட்டது இந்தத் திட்டத்தின் முன்னேற்றம்பற்றி ஆறு மாதத்துக்கொருதடவை தமக்கு அறிக்கை மூலம் தெரியப்படுத்தும்படி மகாராணியார் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு காமினி திஸநாயக்காவிடம்கேட்டுக்கொண்டார் இத்திட்ட அபிவிருத்தி பற்றிய புகைப்படங்களையும் அவ்வப்போது தமக்கு அனுப்பும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

இத்திட்டப்பகுதியைத் தமது கணவருடன் சுற்றிப் பார்வையிட்ட மகாராணியார் இத்திட்டம் நாட்டின் அபிவிருத்தியை மட்டுமின்றி நாட்டின் பூகோள அமைப்பையும் கூட மாற்றி அமைத்துவிடும் என்று தெரிவித்தார்

எலிசபெத் மகாராணியார் கண்டி பூங்காவுக்கு விஜயம் செய்தபோது மலர் ஒன்றுக்கு தம் பெயரை சூட்டினார் கோமகன் பிலிப் மரக்கன்றொன்றை நாட்டினார், மகாராணியும் கோமகனும் இன்று இலங்கையைவிட்டு புறப்படுவார்கள். விக்டோரியா திட்டத்திற்கு பிரிட்டிஷ் அரசு 350 கோடி ரூபாய் நிதிவழங்குகிறது ம

### சிங்கப்பூர் ஜனாதிபதி பதவியேற்றார்

சிங்கப்பூர், அக்., 24

சிங்கப்பூரின் மூன்றுவது ஜனாதிபதியாக திரு. தேவன் நாயர் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

இந்திய சமூகத்தைச் சேர்ந்தவர் பிரபல தொழிற்சங்கவாதியாவார்.

### சார்ள்ஸ் தம்பதிகளுக்கு ஈ.எல். அன்பளிப்பு

(கண்டி)

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸுக்கும், அவரது மனைவி டயனாவுக்கும், யானைத் தந்தத்தில் இரத்தினக் கற்கள் பதித்த சிறிய யானை உருவமொன்று மகாராணியார் மூலம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இந்த அன்பளிப்பினை, விவசாய அமைச்சர் திரு. ஈ. எல் சேனநாயக்கா, திருமதி சேனநாயக்கா ஆகியோர் அரச தம்பதியினர் பேராதனைப் பூங்காவிற்கு விஜயம் செய்தபோது கையளித்தனர். (இ)

## யாழ். தேர்தல் ஆட்சேபனை வழக்கு சட்ட ஆலோசனைக்காக நடா கொழும்பு செல்கிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டசபைத் தேர்தல் ஆட்சேப வழக்கு தொடர்பாக பிரதிவாதிகளில ஒருவரான யாழ். மாவட்ட சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா சட்ட ஆலோசனை தொடர்பாக கொழும்பு செல்லவிருக்கிறார்.

திரு. நடராசா இம்மாதம் 31-ம் திகதி கொழும்பு செல்லவிருக்கிறார்.

அடுத்த மாதம் 11-ம் திகதி இவ்வழக்கு விசாரணை நடைபெறவிருக்கிறது.

கொழும்பு செல்லும் இவர் 2ம் திகதி நடைபெறும் ஜனாதிபதி -தமிழர் கூட்டணி உயர்மட்ட மகாநாட்டிலும், கடற்றொழில் மந்திரி திரு. பெஸ்டஸ் பெரேரா 3ம் திகதி நடாத்தும் சீ-நோர் நிறுவனம் சம்பந்தமான மகாநாட்டிலும் கலந்துகொள்வார். (மா)

## கிளிநொச்சியில் லொறிச் சாரதி தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்

கிளிநொச்சியில் வைத்து நேற்று லொறிச் சாரதி ஒருவர் பலத்த தாக்குதலுக்குள்ளானார்.

லொறிச்சாரதியான ஸ்ரீதரன் உடனடியாக அயலிலிருந்தவர்களால் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

பின் அங்கிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. மா

## சுதுமலையில் இளைஞரின் சடலம்

யாழ்ப்பாணம்

சுதுமலை வயல்வெளியில் தலையில் காயங்களுடன் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

சுதுமலை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த முத்துவேலு செல்லவடிவேலு (31 வயது) என்ற இளைஞரின் சடலம் என அடையாளம் காணப்பட்டுள்ளது

சடலத்தின் அருகே, தெருவில் சைக்கிள் ஒன்றும் காணப்பட்டது.

இவர் இம்மாதம் 22ம் தேதி காலை 9மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டாரென்றும், அதன் பின் இவரைக் காணவில்லை என்றும் கூறப்படுகிறது யாழ்ப்பதில நீதிவான் திரு எஸ் அமிர்தலிங்கம் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்

### விடுமுறை அறிவித்தல்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு (26-10-81) திங்கட்கிழமை 'ஈழநாடு' ஊழியர்களுக்கு விடுமுறையாதலால் 27-ம் திகதி செவ்வாய்க்கிழமைக்குரிய 'ஈழநாடு' வெளிவரமாட்டாது என்பதை அறியத்தருகின்றோம். (ஆ-சி)

### மினிபஸ்சாரதி தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

மாதகல்-பண்டத்தரிப்பு வீதியில், மினிபஸ் சாரதி ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி யாழ். மாவட்டசபைத் தலைவருக்கும் யாழ் அரசாங்க அதிபருக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது.

இவரின் முற்பக்க பற்கள் உடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

## இராணுவம் விசாரித்த 3 இளைஞர்களும் விடுதலை!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறையில், இராணுவத்தினரால் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்ட 3 இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறையில் திடீர் சோதனையின்போது இம்மூன்று இளைஞர்களும் அழைத்துச் செல்லப்பட்டு, இராணுவ முகாமில் வைத்து 2 தினங்கள் விசாரணைசெய்யப்பட்டனராம்.

நேற்று இராணுவத்தினர் அவர்களை காங்கேசன்துறைக்கு கூட்டி வந்து விட்டுச்சென்றனர். (ச-இ)

மினி பஸ்ஸைசெலுத்திவரும் போதே இத்தாக்குதல் இடம்பெற்றதாகவும் அப்போது அந்த பஸ்ஸில் பிரயாணிகள் இருக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. மா

### தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது.

ஐ. நா. தினம்

# சமாதானம், நல்லுறவுக்கு ஐ. நா. உழைத்து வருகிறது

## ஜனாதிபதி செய்தி

(கொழும்பு)

"நாங்கள் ஆயுதப் பரிகரணத்திலும் ஆயுதக்கட்டுப்பாட்டிலும் அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நாடுகள் ஐக்கியமுடனும் ஒன்று சேர்ந்தும் இத்தகைய அபாயத்தை தவிர்க்க ஒரு தீர்வு காணும் என நம்புகிறேன்"

ஐ. நா. தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அச் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

கடந்த உலக மகா யுத்தம் முடிவடைந்து இன்று வரை 36 வருடங்கள் கழிந்துவிட்டன. இந்த 36 வருட சமாதானம் சர்வதேச உறவுகளில் ஏற்பட்டுள்ள தீவிர மாற்றங்களினால் ஏற்பட்டதென்று குறிப்பிட்டுக் கூறமுடியாது. ஆனாலும் சமாதானத்தைப்பாதுகாத்ததற்கான பெருமையில் ஒருபகுதி ஐ. நா. சபைக்குச் சேரவேண்டும். ஐ. நா. சபை அதன் சர்வதேச இயல்பின் காரணமாக ஒரு பொது மன்றமாகச் செயற்பட்டு மிகவும் தீவிரமான எதிரிகளையும் ஒருவரை யொருவர் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும்படி செய்திருக்கிறது. பேச்சுவார்த்தைகள் ஒருமுறை ஆரம்பித்துவிட்டால் அது எப்பொழுதும் யுத்த அபாயத்திலிருந்து ஒருபடி பின் செல்லுவதாகும்.

எனினும் பலாத்காரத்தைப் பயன்படுத்துவதையும், பயமுறுத்தலையும், ஐ. நா. சாசனம் தடைசெய்திருந்த போதிலும் நாடுகள் இன்னும் தமது உறவுகளில் அவற்றையே பயன்படுத்துகின்றன. ஒருநாடு இன்னொரு நாட்டிற்கெதிராக ஆக்கிரமிப்பு செய்வது இன்னும் இடம் பெற்று வருகிறது. போர், இது மனிதனோடு துரதிஷ்டவசமாக ஒன்றிவிட்ட தொன்றாகும். நாகரிகம் தோன்றிய காலம் தொடக்கம், போர்கள் அதனுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டோரையே பாதித்து வந்தது. ஆனால் 20-ம் நூற்றாண்டே போரின் உண்மையான அகோரத்தை அனுபவித்தது. உலகளாவிய போர், போர்வீரன், குடிமகன் என்ற பேதமின்றி சகலரையும் பாதித்தது"

எனவே இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், நாடுகளுக்கிடையே சமாதானத்தையும் நல்லுறவையும் பேணுவதில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமே உண்மையாக உழைத்து வருகின்றது.

வழமையான ஆயுதங்களினதும் அணு ஆயுதங்களினதும் பரந்த வளர்ச்சியும், இதனை ஊக்குவிக்கின்றது. ஆகவே நாங்கள் ஆயுதப் பரிகரணத்திலும், ஆயுதக் கட்டுப்பாட்டிலும், அதிக கவனம் செலுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

ஐ. நா. சபைக்கும் அதன் இலட்சியங்களுக்கும் உலகை மனித வாழ்வுக்கு உகந்த இடமாக மாற்றும் எல்லா முயற்சிகளுக்கும் எமக்களது பூரண ஆதரவை உறுதிப்படுத்துவதில் இந்நாட்டு மக்களுடன் நானும் சேர்ந்துகொள்கிறேன். (ச-இ)

வறுமையில் வாழும் 80 கோடி மக்களுக்கும்

# உருப்படியாக நாம் ஏதாவது செய்யவேண்டும் பிரதமர்செய்தி

(கொழும்பு)

இந்த உலகில் முழுவறுமை நிலையில் வாழும் 80 கோடி மக்களுக்கும் உருப்படியாக ஏதும் செய்வதற்கு நாம் ஆர்வம் காட்டவேண்டும்.

ஐ. நா. தினத்தையொட்டி பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா வெளியிட்ட செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

இன்று உலக குடும்பம் என்ற கொள்கை மீது ஈடுபாடு குறைந்திருப்பது பற்றியும் அதற்கு மீண்டும் புத்துயிர் அளிக்க வேண்டிய அவசியம் பற்றியும் உணர்வு ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய உணர்வு தான் மெல்போர்னில் கூடிய பொதுநல அமைப்பு நாடுகளின் தலைவர்கள் மாநாட்டினை அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கும் இடையில் பரஸ்பர உதவி பரஸ்பர மதிப்பு மாற்றத்தின் மீது பொதுவான நாட்டம் எவையென அவற்றின் அடிப்படையில் ஆக்கபூர்வமான பொருளாதார உறவுகளை அமைப்பதற்கு உலக சமுதாயத்திற்கு உதவ உறுதி கொண்டு இருக்கிறோம் என்ற பிரகடனம் விடுக்கச் செய்தது.

ஐ. நா. தினத்தில் நாங்கள் எங்களை மீண்டும் இத்தகைய பணிகளுக்கு அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்.

# வட்டு லயன்ஸ் கழகத்தின் இலவச வைத்திய சேவை

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் உலகசேவைத்தினத்தை முன்னிட்டு தமது பிரதேசத்திலுள்ள நான்கு பாடசாலைகளில் இலவச வைத்திய சிகிச்சைகளை நடாத்தியது.

மாதகல் சென் தோமஸ் பாடசாலையில் நடைபெற்ற வைத்திய சிகிச்சையில் டாக்டர் எமில் அந்தனுயியர், டாக்டர் பாக்கியசோதி ஆகியோர் பங்குபற்றினார்கள்.

சங்கானை அமெரிக்கமிஷன் த. க. பாடசாலையில் நடைபெற்ற வைத்தியசிகிச்சையில் டாக்டர் எஸ். நாகநாதன் பங்குபற்றினார். நவாலி சென் பீட்டேஸ் ரோ. க. த. பாடசாலை, நவாலி முருகமூர்த்தி வித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெற்ற வைத்திய சிகிச்சைகளில் டாக்டர் சி. செல்வசுதரன், டாக்டர் எஸ். சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதற்கான ஒழுங்குகளை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக பொதுசனத்தொடர்பு உத்தியோகத்தர் ஆசிரியர் உ. ந. தேவகடாட்சம் மேற்கொண்டிருந்தார்.

## மீண்டும் தாக்கப்பட்டனராம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை பகுதியில் நேற்று மீண்டும் வீதியோரங்களில் பொதுமக்கள் தாக்கப்பட்டனர்.

"ட்ராக்"கில் வந்தவர்கள் வீதியில் சென்றவர்களை தாக்கியபோது மக்கள் சிதறி ஓடினார்கள்.

மாவிட்டபுரம் கீரிமலைப் பகுதிகளிலும் நேற்று முன்தினம் தாக்குதல் இடம்பெற்றன.

நேற்றுக் காலையிலும் வீதியால் சென்ற பொதுமக்கள் சில இடங்களில் தாக்கப்பட்டுள்ளனர். (ச)

## சங்குப்பிட்டியில் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

சங்குப்பிட்டியில் வைத்து பிரயாணிகள் கடந்த வியாழக்கிழமை காலை அங்கு நின்ற இராணுவத்தினரால் தாக்கப்பட்டனராம்.

பிரயாணி ஒருவரிடமிருந்த கத்திரிக்கோலை எடுத்து சிலருக்கு மயிரைக் கத்தரித்தனராம்.

சில பிரயாணிகளின் மூக்குத் துவாரத்தில் கத்திரிக்கோலை விட்டு துன்புறுத்தியதாகவும் கூறப்படுகிறது. (ச)

# வரி விளம்பரம்

### காணவில்லை

கொட்டடி வீதியில் நின்ற காரிலிருந்து எனது சாரதி லைசென்ஸ், [illegible] அடையாள அட்டை ஆகியவற்றைக் காணவில்லை. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். பி. பழனிமலை, கிருஷ்ணா ஸ்டோர்ஸ், கரவெட்டி மேற்கு. (1291)

### தேவை

பழைய திருத்தக்கூடிய வீட்டுடன் அல்லது வெறும் காணி (நல்ல அயலவர்கள் உள்ளது.) நாவலர் வீதி, பிறவுன் ரோட், இந்து மகளிர் கல்லூரி, நல்லூர் பகுதிகளில் அல்லது யாழ். டவுனுக்கும் மருதனமடத்துக்குமிடையில் ஒழுங்கைகளிலல்லாமல் பிரதான வீதியில் வீடு கட்டத் தேவை. தொடர்பு கொள்க. Panchalingam, 15, Bagatalle Road, Colombo 3.
(1295)

அரசாங்க நிலைக்களத்தில் வேலை செய்யும் ஆடவருக்கு வசதியுள்ள அறை தேவை. நல்லூர் சுற்றாடல் விரும்பத்தக்கது. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1280. C/O ஈழநாடு லிமிட்டெட் யாழ்ப்பாணம். 1280

### கல்வி

இதுவரை காலமும் எதிர்பார்த்த பொறியியல் கல்விநிலையம் அச்சுவேலியில் 31-10-81ல் ஆரம்பமாகிறது. இது J E C. ஸ்தாபனத்துடன் ஒன்றிணைந்து 3-11-81 தொடக்கம் மின்பொறியியல், எஞ்ஜினியரிங், கணிதம், தொழில்நுட்ப இரசாயனம் ஆகிய கலைகளை கிழமை நாட்களில் நடத்தும். உடனடியாக தொடர்பு கொள்க; J. E. C, சாந்தி தியேட்டர் அருகாமை, யாழ்ப்பாணம். 1289

### வாடகைக்கு

வசதியான சிறிய (பகுதி) வீடு கௌரவமான சிறிய குடும்பத்திற்கு வாடகைக்குண்டு. 19, கடைச்சாமி வீதி, நாவலர் வீதிக்கப்பால்.
(1297)

யாழ். நகரின் மத்தியில் 3 பேஸ் (3 Phese) மின்சார வசதி உடன் கைத்தொழிலுக்கு உகந்த இடம் வாடகைக்கு விடப்படும். 6, பிரதான வீதி, பருத்தித்துறை.
(1274)

### விற்பனைக்கு

சுண்டிக்குளி மகளிர், பரியோவான் பாடசாலைக்கு அண்மையில் மூன்று பரப்புக் காணி நிலம் ஈச்சமோட்டையில் உடனடியாக விற்பனைக்கு உண்டு. கண்டி வீதி, சாவகச்சேரி எஸ். சுரேந்திரன், அற்றேணி (Attorney - at - law) யுடன் தொடர்பு கொள்ளவும்.
(1298)

யாழ்ப்பாணம் 3ம் குறுக்குத்தெருவில் சுமார் 8 பரப்பு திறமான வெறும் காணி (நல்ல அயலவர்கள் உண்டு.) விற்பனைக்குண்டு. விலை 3½ லட்சம். தொடர்பு: Panchalingam, 15 Bagatalle Road, Colombo - 3. 1296

உரும்பிராய் சந்தியில் இருந்து அரைமைல் தூரத்தில் கோப்பாய் வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 83, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். 1292

1982ம் ஆண்டு S L மோடல் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட மிற்சுபிசி லான்சர் (Mitsubishi Lancer) கார் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: டாக்டர் - சேதுபிள்ளை, ராசதோப்பு வளவு, சாவகச்சேரி. தொலைபேசி 217 (1284)

சாவகச்சேரி தபாற்கந்தோர் ரோட்டில் 1-ம் கட்டை ஒழுங்கையில் வருமானங்களுடன் வீடு கட்டக்கூடிய 15 பரப்புக் காணி முற்றாகவோ துண்டுகளாகவோ விற்கப்படும். விபரங்கட்கு: த. கிருஷ்ணசாமி, நில அளவையாளர், பேரம்பலம் வீதி, கச்சாய் ரோட், சாவகச்சேரி.
[1225]

யாழ்ப்பாணம் மணிக்கூண்டு வீதி, 70ல் வலம்புரிச்சங்கு விற்கப்படும்: த. வடிவேலு.
[1301]

புளியங்குளம் வீதி கொழும்புத்துறையில் வீடு சுற்றும் நிலம் 4 பரப்பு விற்பனைக்கு உண்டு. விபரத்திற்கு S. சிவராசா, சித்திரகலா ஸ்ருடியோ, நம். 70, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். [1300]

சகல வசதிகளுடன் கூடிய புதிய வீட்டுடன் இரண்டரைப் பரப்பு காணி தும்பளை பிரதான வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: க. சந்திரமோகன், புலோலி கிழக்கு, தும்பளை வீதி, பருத்தித்துறை. 1198

### விற்பனைக்கு

புதிய 84 Sri Yamaha—Y B 80 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. Dr. வி. விஜயமூர்த்தி, 9, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம். [1299]


தீபாவளி மலிவு விற்பனே!

27-10-81 வரை

சகல துல்டெக்ஸ் புடவை வகைகளுக்கும் 10% கழிவுண்டு

இன்றே விஜயம் செய்யுங்கள்

துல்கிரிய நெசவாலேயின் யாழ் விற்பனே நிலயம்

லேடன்காமென்ஸ்

86, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 330 (1275)

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

110, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்

போன்: 7199. தந்தி: வைரம்.

யாழ். இராணுவ வீரர் மரணவிசாரணை

# "பொலிஸார் சுடுகிறார்கள் என்று கூறிக்கொண்டு ஓடினார்கள் பத்து பன்னிரண்டு வெடி கேட்டது"

## இராணுவ சார்ஜண்ட் சோமபாலா சாட்சியம்

- ஏ. வி- மாணிக்கம் -

(யாழ்ப்பாணம்)

'ஏதோ குழப்பம் நடந்திருக்கிறது. கிட்டடியான இராணுவ முகாமுக்கு அறிவித்தல் கொடுக்கவேண்டும்" என்று சுமண டி. சில்வா என்னிடம் கூறிவிட்டுத் திரும்பிச்சென்றார்' பலாலி இராணுவ பொறியியல் பிரிவு சார்ஜன்ட் அத்துகோறள சோமபாலா, யாழ். நீதிமன்றத்தில் நடைபெற்ற மரணவிசாரணையில் சாட்சிய மளிக்கையில் தெரிவித்தார்.

யாழ் நீதவான் திரு. ரி. யோகநாதன் முன்னிலையில் இவ்விசாரணை நடைபெற்றது.

சென்ற 15-ம் திகதி யாழ். காங்கேசன்துறை வீதியில் நடைபெற்ற இராணுவ வீரர் துப்பாக்கிச் சூட்டுக்கொலை சம்பந்தமான மரணவிசாரணை யாழ். நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இரகசியப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே. ஜே. என். பெரேரா இறந்தவர்களின் நலனுக்காக ஆஜராகியிருந்தார்.

சார்ஜன்ட் அத்துகோறள சோமபாலா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

'எங்களுடைய படைப்பிரிவு தான் யாழ். குடாநாட்டிலுள்ள இராணுவக் கட்டிடங்களுக்குப்பொறுப்பாகவுள்ளது.

எங்களுடைய பிரிவுத்தலைவர் காப்டன் கே.வி. கே.பெரேரா. அவருக்கு இரண்டாவதாக கும்மணசேன இருக்கிறார்.

கட்டிடங்களுக்குத் தேவையான பொருட்களை கொழும்பு எங்களுடைய பிரதான பண்டகசாலை பனாகொடையிலுள்ளது. ஏதாவது சாமான்கள் தேவைப்பட்டால் கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனத்தில் கொள்வனவு செய்யப்படும். அதேபோல் யாழ். பாண்சி ஹௌவுஸ் ஸ்தாபனத்திலிருந்தும்கொள்முதல் செய்யப்படும்.

### ஜீப்பின் பின்னாலும் முன்னாலும் இருவர் விழுந்து கிடந்தனர்

எனக்கு இம்மாதம் 15-ம் திகதி ஞாபகமிருக்கிறது. அன்று சாமான் கொள்வனவு செய்ய யாழ் நகரத்துக்கு வேறு சிலருடன் வந்தேன். நாங்கள் வந்த இராணுவ ஜீப்பின் இலக்கம் 4833.

என்னுடன் அந்த வாகனத்தில் வந்தவர்கள் சுமண சேன டி சில்வா, லான்ஸ் கோப்ரல் ஹேமவசம, திசேரா. எல்லாமாக 4 பேர் வந்தோம்.

எங்களில் இராணுவ சீருடை அணிந்தவர்கள் கோப்ரல் ஹேமவசமும், பயனியர் திசேராவுமே

பலாலிமுகாமிலிருந்து பிற்பகல் 4-35 மணிக்கு புறப்பட்டோம்.

பயனியர் திசேரா 303 நம்பர் றைபிள் வைத்திருந்தார் அத்துடன் 10 தோட்டாவும் வைத்திருந்தார் றைபிள் இலக்கம் ஈ. எவ்.255693.

ஸ்ரான்லிவீதியிலுள்ள 3ஸ்தாபனங்களுக்கு சென்றுவிட்டு கே. கே. எஸ். வீதியிலுள்ள வைத்திலிங்கம் கம்பெனிக்கு வந்தோம்

நானும் சுமண சேன டி சில்வாவும் முன் ஆசனத்தில் இருந்தோம். கோப்ரல் ஹேமவசம வாகனத்தை ஓட்டினார்.

பயனியர் திசேரா வாகனம் பின்பக்கமிருந்தார் வைத்திலிங்கம் கம்பனிக்கு அண்மையில் வந்தபொழுது அவ்விடத்தில் வாகனத்தை நிற்பாட்ட இடமில்லாததால் ஜீப்பைமுன்பாக நிற்பாட்டுவதாகவும் எங்களை பொருட்களை வாங்கும் படியும் சொன்னார்.

வைத்திலிங்கம் கம்பெனிக்கு வந்த நேரம் 4-50 இருக்கும்.

நானும் சுமணடி சில்வாவும் வைத்திலிங்கம் கம்பெனிக்கு சென்று எல் வடிவ இரும்புக்கு விலை கேட்டோம்.

### ஜீப்பிலிருந்து இறங்கினோம்

நாங்கள் ஜீப் வண்டியிலிருந்து இறங்கியது வைத்திய லிங்கம் கம்பனிக்கு முன்பாக. இக்கம்பனிக்குள் நிற்கும் போது பத்து பன்னிரண்டு வெடிச்சத்தம் கேட்டது. சத்தம் ஜீப் வண்டி போன இடத்திலிருந்து கேட்டது.

### பொலிசார் சுடுகிறார்கள்

வெடிச்சத்தம் கேட்டபின்பு கடைக்கேறும் படியில் நின்றோம் அப்படி நாங்கள் நிற்கும் போது 'பொலிசார் சுடுகிறார்கள்" என்று சொல்லிக்கொண்டு பலர் இருபக்கமாகவும் ஓடினார்கள்.

அந்நேரத்தில் ஒருவர் துவிச்சக்கர வண்டி ஓட இன்னொரு நபர் 'பாரில்' இருந்து சென்றார்.

### கையில் றைபிள் இருந்தது

பாரிலிருந்து சென்றவர் கையில் ஒரு 303ரக றைபிள் இருந்தது அந்த றைபிளை முன்பக்கமாக வைத்து சற்றுமேல்பக்கமாக உயர்த்திக் கொண்டிருந்தார்.

இத்துவிச் சக்கரவண்டியில் சென்றவர்கள் காங்கேசன் துறைப் பக்கமாகச்சென்றார்கள்.

நாங்கள் அவர்கள் நின்ற இடத்தைத்தாண்டி செல்லும் பொழுது றைபிளைசுடும்தயார் நிலைக்கு கொண்டுவந்து 'அவுட் அவுட்' என்று சத்தம் போட்டுக்கொண்டுசென்றார்கள் அத்துடன் ஆகாயத்தை நோக்கிச் சுடப்பட்டது 'அவுட் அவுட்' என்று வீதியில் சென்ற சனங்களுக்குத்தான் சொன்னார்கள் - அந்த சைக்கிளில் சென்ற இருவரும் சாதாரணமாகச் செல்வதைப் போலத்தான் சென்றார்கள். எனக்கு சைக்கிளில் கொண்டு போன றைபிள் என்னமாதிரி என்று கூறமுடியும் அதாவது அதன் அடையாளங்களைக் கூறமுடியும். அந்த துவிச்சக்கர வண்டியின் பாரில் இருந்து சென்றவருக்கு 26 அல்லது 27 வயதிருக்கும். பொது நிறம் - வட்டமான முகம் - தலைமயிர் ஒருபக்கம் சீவப்பட்டிருந்தது மீசையில்லை-அவர் சைக்கிளில் இருந்துகொண்டிருந்தார் நல்லதோற்றமானஉடற்கட்டு இந்நபரைக் கண்டால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அந்நேரத்தில் அந்நபர் காக்கி நிற நீளக் காற்சட்டையும் வெள்ளை அல்லது கிறீம் நிற ஷேர்ட்டும் அணிந்திருந்தார்.

### நிறத்தை அவதானிக்கவில்லை

சைக்கிளில் ஓடிச்சென்றவர் கலிசான்தான் போட்டிருந்தார். ஆனால் அதன் நிறத்தை நான் அவதானிக்கவில்லை.

பாரில் இருந்து சென்றவர் அணிந்திருந்த ஷேர்ட்டில் பூப் போடப்பட்டிருந்தது.

சைக்கிளில் எங்களைத் தாண்டிச் சென்ற பின்பு சுமண டி. சில்வா, தான் ஜீப்வண்டியைப் பார்த்துவிட்டு வருவதாகவும் என்னைக் கடைக்குச் சென்று வருமாறும் சொன்னார். அந்நேரத்தில் எங்களுக்கு யார் சுடப்பட்டார் என்பது தெரியாது.

### மற்றொருவர் சென்றார்

அப்படி சுமண டி சில்வா சென்ற பின்பு இன்னொரு நபர் சைக்கிளை உருட்டிக்கொண்டு காங்கேசன்துறை வீதியால் சென்றார். அவர் கறுவல் நிறம்-கட்டையானவர் - 30 வயதிருக்கும் - அவர் அப்படி சைக்கிளில் உருட்டிக்கொண்டு சென்ற அதை விட்டுவிட்டு லைட்கம்பத்தில் சாத்தப்பட்டிருந்த சைக்கிளை எடுத்துச் சென்றார்.

### திசேரா கிடப்பதாகக் கூறினார்

அதன்பின்பு சுமண டி சில்வா ஓடிவந்து ஏதோ குழப்பம் நடந்திருக்கிறது! கிட்டடியான இராணுவ முகாமுக்கு அறிவித்தல் கொடுக்கவேண்டும் என்று கூறிவிட்டு திரும்பிச்சென்றார். அத்துடன் திசேரா நிலத்தில் விழுந்து கிடப்பதாகவும் கூறினார். அப்படிக் கூறிவிட்டு சுமண டி சில்வா அப்பக்கம் சென்றார்.

நாங்கள் வைத்திலிங்கம் கம்பனிக்கு முன்பாக நிற்கும் பொழுது எங்களுக்குத்தெரியக் கூடியதாக ஜீப் வண்டி நிற்கவில்லை.

நான் வைத்திலிங்கம் கடைக்குச்சென்று பலாலி முகாமுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். நடந்த சம்பவம்பற்றி சொன்னேன். அதன்பின்பு நானும் ஸ்தலத்திற்குச் சென்றேன். நான் அங்கு சென்றபொழுது திசேரா ஜீப்புக்குப் பின்னால் விழுந்து கிடந்தார். ஹேமவாச ஜீப் முன்புறமாக விழுந்து கிடந்தார்.

ஜீப் வண்டி வீதியில் நடுவில் நிற்பாட்டப்பட்டிருந்தது.

ஜீப் வண்டி யாழ்ப்பாணம் பெரிய தபால் கந்தோர் பக்கமாக பார்த்துக் கொண்டு நின்றது.

ஸ்தலத்திலிருந்து தபால் கந்தோர் பக்கம் பார்க்கும்போது றோட்டின் வலதுபக்கம் பொது மக்களில் இருவர் காயப்பட்டிருந்தனர். சிறிது நேரத்தில் யாழ்ப்பாணம் பொலிசார் ஸ்தலத்திற்கு வந்தார்கள்.

### இறந்து கிடந்தார்

கோப்ரல் ஹேம வாச அந்நேரம் இறந்து கிடந்தார். பொலிசார் வந்தபின்பு சுமண டி. சில்வா பொலிசாருக்கு நடந்த சம்பவம்பற்றிச் சொன்னார். அதன் பின்பு திசேராவை ஜீப்பில் ஏற்றிக் கொண்டு யாழ். அரச வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றேன்.

திசேராவை ஆஸ்பத்திரியில் அனுமதித்துவிட்டு அந்த வாகனத்தில் ஸ்தலத்துக்குச்சென்று அன்றிரவு யாழ் பொலிசுக்கு சென்று வாக்குமூலம் கொடுத்தேன்-

நாங்கள் சென்ற ஜீப்வண்டியில் லைட் ஏற்றப்பட்டிருந்ததால் பின்பக்கம் திறந்திருந்தது. திசேரா கொண்டுவந்த றைபிளும் ஸ்தலத்தில் காணப்படவில்லை.

பொறியியலாளர் பிரிவு சார்ஜன்ட் சுமண டி. சில்வாவும் சாட்சியமளித்தார். (நா)

---

# விவாக வீட்டிற்கு விரைகிறார் வியாழ பகவான்

கலாநிதி பண்டிற் கே. என். நவரத்தினம்

வியாழபகவான் 27-10-1981 பிற்பகல் சரியாக 1-29 மணிக்கு அதிசாரவேகத்தில் கோள்மண்டலத்தின் 7-ம் ராசியாகிய விவாகத்தைக் குறிக்கும் துலா ராசிக்கு இடம் பெயருகின்றார் வானியல் விற்பன்னர்களும் துல்லிய சோதிட கணிதர்களும் 27-10-81ல் தான் குருமாற்றம் அடைகிறார் என்பதை தெளிவு படக்கூறியுள்ளனர்.

சோதிட விற்பன்னர்களாலும் வானியல் சாஸ்திரிகளாலும் மிகவும் அழகும், சாந்தியும், பாரம்பரியமுமான கிரகமென போற்றப்படும் இக்கிரகம் எல்லாச் சோதிட நூல்களிலும் மிகப்பெரிய சுபன் என்றும் தெய்வீகக்கிரகமென்றும் விரிவு, ஆக்கம், வளர்ச்சி, தனம், தங்கம், கல்வி, நீதி முதலியவற்றுக்குத் தலைவரென்றும் போற்றப்படுகிறார். இந்துக்கள் இவரைத் தட்சணாமூர்த்தியாக வழிபட்டு வருகின்றனர். இதனாலேயே குரு பார்க்க கோடி பாபம் நீங்குமென்பது சோதிடப்பழமொழியாக அமைந்தது.

1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ந் திகதிவரை குரு பகவான் துலாராசியில் சஞ்சரிப்பார். இக்காலத்தில் மார்ச் மாதம் 2-ம் திகதி தொடக்கம் 29-6-82 வரை வக்கிரகதியில் துலாராசியிலேயே சஞ்சரிப்பார்.

இச்சுபசஞ்சாரத்தின் பொதுபலன்களாவன:-

கோள்மண்டலத்தின் விவாகத்தைக் குறிக்கும் 7-ம் ராசியாகிய துலாராசியில் குருவின் சஞ்சாரம் காதல் விவகாரங்களைச் சிறக்க வைக்கும் விவாகவைபவங்கள் சிறப்பாக நடைபெறும். விவாகத்துறையில் ஈடுபடுவோருக்கும் விவாகத்தரகர்கட்கும் நற்பலன் கொடுக்கும் தாமதித்த விவாகங்கள் நிறைவேறும்.

புத்திரகாரகன் குருபுத்திரர்களுக்கு நற்பலன் கொடுப்பார். இக்காலத்தில் ஆண் பிரசவங்கள் அதிகரிக்கும் குழந்தைகளின் வருத்தங்கள் குறைந்து ஆரோக்கியம் சிறக்கும்.

தனகாரகன் குரு வக்கியாளனாவே தனநிலை, வங்கி வைப்பு சீரடையும். வருவாய் முறைகளில் பெரு மாற்றங்கள் ஏற்படும், பணவீக்கமும் புழக்கமும் அதிகரிக்கும்.

வித்தியாகாரகன் வியாழன் கல்விமுறைகளில்சீர்திருத்தங்களும், முன்னேற்றமும் காட்டும், உயர் கல்விகளில் நற்சீர்திருத்தங்கள் அமுலுக்குவரும். தரப்படுத்தல் குறையும். கல்விமான்கள் பேராசிரியர்கள், கல்வி அதிபர்கள் பற்பல விதத்திலும் முன்னேற்றம் காண்பார்கள்.

தெய்வீகக்கிரகம் குரு தெய்வ வழிபாடு, திருவிழாக்கள், கும்பாபிஷேகங்கள் அறநிலைச் சீர்திருத்தங்கள் முதலியனவற்றிக்கும் சமயகுரவர் பூசகர்கள் முதலியோருக்கும் நன்று.

குரு நீதிபதி. நீதியைக் குறிக்கும் துலா ராசியில் சஞ்சரிப்பதால் நீதித்துறை சீரடைந்து, நீதிபரிபாலனம், நீதிபதிகள், நியாயதுரந்தரர்கள் முதலியோருக்கு பல நன்மைகள் உண்டுபண்ணும்

துலாம் கலைராசி, குருசஞ்சாரஞ்செய்வதினால் கலைஞர் முன்னேற்றம் காண்பர். கலை, நடனம், சங்கீதம், நாட்டுக்கூத்துக்கள், சித்திரம் முதலிய கலைத்துறைகளில் பல முன்னேற்றம் காட்டும். பழைய கொள்கைகள் மாறி நவீன விஞ்ஞானக் கருத்துக்கள் படிப்படியாக வளர்ச்சியுறும்.

இனிப் பொதுவாக உலக நாடுகளுக்கு குரு மாற்றம் எப்படி என்பதைப் பார்ப்போம்.

### இலங்கைக்கு

இலங்கையை ஆளும் கும்ப ராசிக்கு 9-ம் ராசியில் குரு பவனிவருவது பொதுவாக நன்றே ஆயினும் அதிக நற்பலன் கிட்டாது, எதிர்பாராத அரசியல் பூகம்பங்களும், அமைதியின்மையும், விபத்துக்களும், மலைச்சரிவுகளும், திடீர் மரணங்களும், விபத்துக்களால் மரணங்களும், இயற்கை அழிவும், செயற்கை அழிவுகளும் உண்டுபண்ணும். பொறுப்புள்ள மந்திரிசபை மாற்றங்களும், அமைதியற்ற பாராளுமன்ற நடவடிக்கைகளும் நாட்டை துக்கசாகரத்தில் ஆழ்த்தும். ஒரு மிகப்பெரியார் மறைவார்.

### இந்தியாவுக்கு

இந்தியாவுக்கு குரு மாற்றம் நன்று. விஞ்ஞான ரீதியில் பெரும் முன்னேற்றமும், நிதி, பொருளாதாரம் முதலியவற்றில் சிறப்பும் உண்டாகும்.

### அமெரிக்காவிற்கு

உள்நாட்டுக்கலம் பூகம்பம் தொழில் புரட்சி வேலைநிறுத்தம் முதலியன காட்டும். யுத்தபயம் அதிகரிக்கும் ஜனாதிபதியின் நிலை தளர்ச்சியடையும் முதலீடுகளில் (Stock Market) படுகுழியில் விழும்.

### அவுஸ்ரேலியா-சீனாவுக்கு

மிகமிக நன்று விவசாயம் பெருகும் மழைவீழ்ச்சி நன்றாக இருக்கும் பொருளாதார முன்னேற்றங்கள் உண்டுபண்ணும்,

### இங்கிலாந்துக்கு

இங்கிலாந்துக்கு ஒரு சோதனையான காலமாயினும் பற்பலமாற்றங்களால் முன்னேற்றம் உண்டு பண்ணும் அரசியல் தலைவிக்கு இருந்த எதிர்ப்புகள் குறையும்.

### மத்திய கிழக்கில்

யுத்த பீதி அதிகரிக்கும் கொந்தளிப்புகள், அமைதியின்மைகள் வந்துசேரும் ஈரான் தேசம் மேலும் பல சோதனைகளைத்தாண்டி பிற்பகுதியில் சீரடையும்.

### இஸ்ரேல்

இந்நாட்டு பொருளாதார சமூக கல்விவளர்ச்சிக்கு மிக நன்று தன நிலை மேலும் சிறந்து வீறுநடைபோடும்.

இப் பன்னிரு ராசிகளில் பிறந்தோருக்கும் தனிப்பட்ட பலன்களை ஆராய்வோம்.

(6-ம் பக்கம் பார்க்க)

# ''அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்த நிதி இல்லை'

## மன்னார் அபி. சபைத்தலைவர் கூறுகிறார்

(மன்னார்)

''அரசாங்கம் தனது கன்னி முயற்சியாக மாவட்ட அபிவிருத்தி சபையை ஏற்படுத்தியுள்ளது. மாவட்ட அபிவிருத்தி சபையில் நல்ல பல திட்டங்கள் உண்டு. திட்டங்களைச் செயல்படுத்த நிதி யில்லை''.

இவ்வாறு முருங்கன் இளைஞர் முன்னேற்றக் கழகத்தில் செம்மணிதிவு நீர்ப்பாசன இலாகா அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்ட இராப்போசன விருந்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு. பி. எம். செபமாலை கூறினார்.

இவ் வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை தலைவர் திரு. பி. எம். செபமாலை கூறியதாவது.

''மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையில் நிதி இல்லை. இப்போது எப்படி நிதியைச் சேகரிப்பதென ஆலோசனைகள் நடத்தி வருகிறோம். போதிய நிதியைப் பெற்றே அல்லது வங்கிகடன் மூலமாகவோ மன்னார் மாவட்டத்தை அபிவிருத்தி செய்வோம்.

''மன்னார் மாவட்டம் கல்வியில் முன்னேற்றமடைய பரந்த அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்படும். கிராமப்புற மாணவர்கள் தமது பகுதிகளில் கல்வியைக் கற்று பல்கலைக் கழகத்திற்குச் செல்லக் கூடிய வழிவகைகள் செய்யப்படும்.

''மன்னார் மாவட்டத்தில் மையமாகவுள்ள சில வைத்திய சாலைகள் தரமுயர்த்தப்பட்டு கிராமப்புற மக்களுக்கும் சிறந்த வைத்தியசேவை அளிக்கக் கூடியதாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்'' என்றார். (செ)

## நிருபர் தாக்கப்பட்டார்

[பண்டத்தரிப்பு]

சித்தங்கேணியைச் சேர்ந்த பத்திரிகை நிருபர் ஒருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டார்.

பிற்பகல் நேரத்தில் தமது சைக்கிளில் சித்தங்கேணிச் சந்தியால் வீடு நோக்கி பிரஸ்தாப பத்திரிகை நிருபரான தங்கரத்தினம் சென்று கொண்டிருந்தபோது இராணுவ வீரர்கள் கோஷ்டி ஒன்று அவரைக் கலைத்துச் சென்று பலமாகத் தாக்கினராம்.

மயக்கமடைந்த அவரை பொதுமக்கள் வீட்டிற்குக் கொண்டுபோய் சேர்த்தனராம்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து மேலிடத்திற்கு நிருபர் முறைப்பாடு செய்துள்ளார்.

## மிதக்கும் பல்கலைக் கழகம்

(கொழும்பு)

யுனிவேர்ஸ் என்ற பெரிய கப்பல் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தரவுள்ளது.

நவம்பர் மாதம் 3ந் திகதி வரும் இக் கப்பல், நவம்பர் 6ந் திகதிவரை நான்கு நாட்கள் இலங்கையில் தரித்து நிற்கும். பல்வேறு துறைகளையும் சார்ந்த பல மாணவர்களை இக் கப்பல் இங்கு கொண்டுவருகிறது. இங்குவரும் மாணவர்கள், இலங்கையில் பல்வேறு இடங்களையும் பார்வையிடுவதுடன், நாட்டின் கலை, கலாசாரம், மக்களது வாழ்க்கை முறைகள் சம்பந்தப்பட்ட தகவல்களையும் பெறவுள்ளனர்.

கல்விச் சுற்றுலாவில் வரவிருக்கும் ''யூனிவேர்ஸ்'' கப்பல் முன்பும் பலமுறை இலங்கை வந்துள்ளது. இக் கப்பலை, மிதக்கும் பல்கலைக் கழகமென்று அழைப்பர். (கி)

## தலைமன்னாரில் இந்திய மீனவர்

[மன்னார்]

படகில் இயந்திரக் கோளாறு காரணமாக தலைமன்னார் கடற்கரையில் கரை ஒதுங்கிய 5 இந்தியமீனவர்கள் தலைமன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களை இந்தியாவுக்கு அனுப்புவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. [க]

## தாக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதான வீதியில் இராணுவத்தினரால் கடுமையான தாக்குதலுக்குள்ளான ஐயாத்துரை ஈசன் (30 வயது) யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [மா]

# செல்வந்த நாடுகளின் நிதி உதவிகளை அன்பளிப்பாகக் கருதி வீண்விரயம்செய்தல்கூடாது

## வளரும் நாடுகளுக்கு இந்திரா அறிவுரை

கான்கூம், அக். 24

''உலக வங்கியும், சர்வதேச நாணயச் சபையும் கடன் வழங்குப்போது பொருளாதார காரணங்கள் அல்லாத பிற காரணங்களைச் சேர்க்கப் படக்கூடாது''

இவ்வாறு இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மெக்சிக்கோவில் நடைபெறும் உலகத் தலைவர்களின் உச்சி மாநாட்டில் தெரிவித்தார்.

''செல்வந்த நாடுகளிலிருந்து வரும் உதவிகளை வளரும் நாடுகள் அன்பளிப்பாகக் கருதி வீண் விரயம் செய்யாது நல்ல ஆக்க பூர்வமான வளர்ச்சிப் பணிகளுக்கு அவ்வுதவிகளைப் பயன்படுத்தவேண்டும் வளர்ச்சிப் பணி முன்னேற நிதி பெருகவேண்டும்''. என்றும் திருமதி காந்தி கூறினார்.

இதே வேளையில் இந்தியாவின் பசுமைப் புரட்சி அந்நாட்டின் மகா வெற்றி வரலாறு என மாநாட்டுக்குவந்திருந்த அமெரிக்க ஜனாதிபதி திரு. ரேகன் உட்பட பல உலகத் தலைவர்கள் பிரதமர் திருமதி காந்திக்கு தங்களது பாராட்டுக்களைத் தெரிவித்தனர். (கு)

## ரூ. ஒன்றரைலட்சம் செலவில் வீதி

(உடுப்பிட்டி-புலோலி)

வரணி — அந்தணத்திடல் வீதி சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. கிராமிய மக்கள் சிரமதான முறையில் இவ்வீதி அமைப்பு வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வரட்சி நிவாரண நிதியிலிருந்து இவ்வீதி அமைப்புக்கான நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும்மயிலும் பணிப்பின் பேரில் கப்புதூ கிராம சேவை அலுவலர் திரு எஸ், விநயகுமார் இவ்வீதி அமைப்பு வேலைகளை மேற்பார்வை செய்து வருகின்றார். [இ]

## கால்நடை வளர்ப்போர் கூட்டம் இன்று

(புலோலி)

துன்னாலை வடக்கு கால்நடை வளர்ப்போர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை சங்கத் தலைவர் திரு ரீ. செங்காதரன் தலைமையில் மயில்வாகனம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விலங்கியற்துறைப் பேராசிரியர் திரு. வி. கே. கணேசலிங்கம், வடமராட்சி கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் ரீ. கதிரவேற்பிள்ளை ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டம், கால்நடை வளர்ப்பு, வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பு முறை ஆகியனபற்றி இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

# போலந்தில் அமைதிகாக்க இராணுவம் அழைக்கப்படும்

## அரசு அறிவிப்பு

வார்சோ, அக். 24

நாட்டில் தற்போது நிலவி வரும் அமைதியின்மையைப் போக்கவும், வீண் விரயங்களைத் தடுக்கவும் போலந்து அரசு இராணுவத்தைப் பயன்படுத்தப்போவதாக அறிவித்துள்ளது.

போலந்தில் சுதந்திரத் தொழிற்சங்கம் சக்தி வாய்ந்ததாக இருப்பதும் தொழிற்சங்க உறுப்பினர்கள் பரந்தளவில் வேலை நிறுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் பொருளாதார நிலை நலிவுற்றதும், நாட்டில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டதும், ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதும் தெரிந்ததே (கு)

## வடமராட்சியில் காட்டு மரங்களை வெட்டுவோர் மீது நடவடிக்கை

[புலோலி]

வடமராட்சி கிழக்குப்பகுதியில் உள்ள அரச காணிகளில் வளர்ந்துள்ள காட்டுமரங்களை வெட்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பருத்தித்துறை எம்.பி. திரு. கே. துரைரத்தினம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

''வடமராட்சி கிழக்குப் பகுதியில் இயற்கையான மரக்காடுகள் பெருமளவில் வெட்டப்பட்டு வருகின்றன. இந்நிலை மேலும் நீடிக்குமிடத்தில் பெரும் பாதிப்பு ஏற்படும். இம் மரங்கள் வெட்டப்படுவதால் இயற்கைவளம் குன்றுகின்றது. மழைவீழ்ச்சி குறைவடையக் காரணமாகின்றது'' என்றார்.

### பட்டப்பகலில்

# தனியே சென்ற பெண்ணிடம் தங்கச்சங்கிலி கொள்ளை

[பண்டத்தரிப்பு]

பட்டப்பகல் நேரத்தில் வீதியால் சென்றுகொண்டிருந்த பெண் ஒருவரின் ஆறாயிரம் ரூபா பெறுமதிமிக்க தங்கச் சங்கிலி சைக்கிளில் வந்த இளைஞர்களால் அறுக்கப்பட்ட சம்பவம் சில்லாலையில் நடைபெற்றது.

பனிப்புலத்தைச் சேர்ந்த திருமதி செல்வநாயகி துரைராசா என்னும் மேற்படி பண்டத்தரிப்பு தபால் நிலையத்திற்கு வந்துவிட்டு சில்லாலைக்கு ஊடாக தமது வீட்டிற்கு திரும்பிச் சென்றபோதே இச்சம்பவம் நடந்தது.

பின்புறமாக சைக்கிளில் வந்த இரு இளைஞர்களே இவரது சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பி ஓடியதாக காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிசார் இச் சம்பவம் குறித்து தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். [க]

ப. நோ. கூ. சங்கம்

## தலைவர்: கூட்டணி உப தலைவர்: சுதந்திரா

[புங்குடுதீவு]

புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் திரு. பி. சதாசிவம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உபதலைவராக திரு. சு. வே. பூரசா தெரிவுசெய்யப்பட்டார்.

திரு. பி. சதாசிவம் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவர். திரு. பூரசா ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தீவுப்பகுதிச் செயலாளர்.

## கால்வாய் உடைப்பெடுத்து மூவர் பலி!

சென்னை, அக். 24

மதுரையில் மழை காரணமாக கால்வாயொன்று உடைத்து இரண்டு பெண்களும் ஒரு சிறுமியும் மாண்டனர். சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

செங்கல்பட்டில் சுற்றுலா பஸ் ஒன்றும் புகையிரதமும் மோதுண்டு 12 பேர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (கு)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

பாரினில் சிறந்த பாப்புலர் பொருட்களுக்கு
அம்பலவாணர் அன் சன்ஸ் – யாழ்ப்பாணம்

எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மிக மகிழ்ச்சிகரமான
தீபாவளி வாழ்த்துக்கள்

எம்மிடம்............
மின்சார இணைப்புப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், கடதாசி வகைகள், அலங்காரப் பொருட்கள், பாவனைப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள் அனைத்துக்கும்
மொத்த, சில்லறை வியாபாரிகள்

அம்பலவாணர் அன் சன்ஸ்

(தேசிய கடதாசிக் கூட்டுஸ்தாபன அங்கீகாரம் பெற்ற வியாபாரிகள், மின்சார இணைப்பு ஒப்பந்தகாரர் - விற்பனையாளர்)
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 8291, தந்தி: 'வாணர்சன்ஸ்'
(வைத்தெது பிள்ளையார் ஆலயத்துக்கு முன்னால்)

தலைமையகம்:
பேர்ள் லேட்ஸ்-அம்பலவாணர் சன்ஸ்,
78, மலிபன்வீதி, கொழும்பு, 11. போன்: 24821—28244
லெட்சுமிபவான், 97, ஒல்ஹொட் மாவத்த, கொழும்பு 11.

கிளிநொச்சி வங்கிக் கொள்ளை:

# ஏழை விவசாயிகளே சகல விதத்திலும் பாதிப்பு

## ஆனந்தசங்கரி எம். பி. கவலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஏற்பட்ட கொடிய வரட்சியினால் பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகள் தமது கடும் உழைப்பினால் நகைகளுடன் மக்கள் வங்கியில் தஞ்சம் புகுந்திருந்தனர். கடும் வரட்சியே அவர்களை வங்கியில் தஞ்சம் புக வைத்தது. இப்போது அவர்களின் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இந்த ஏழை விவசாயிகளுக்கு அரச வழங்க இருக்கும் நஷ்ட ஈடு அவர்களது இழப்பை ஈடு செய்யக்கூடியதாக இருக்காது. இவ் வங்கியில் இடம் பெற்ற கொள்ளையினால் பல துறைகளிலும் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு குற்றமும் அறியாத ஏழை விவசாயிகளே. அரச அதிகாரிகளோ காவல் துறையினரோ இந்த விவசாய மக்களுக்கு எதுவித கஷ்டமும் கொடுக்காது பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

இவ்வாறு கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி கிளிநொச்சி வங்கிக் கொள்ளையை அடுத்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கொள்ளையையும் கொள்ளைச் சம்பவத்தின் போது இராணுவவீரர் கொலைப் பட்டதையும் கண்டித்து வெளியிட்ட இந்த அறிக்கையில் திரு. ஆனந்தசங்கரி மேலும் கூறியதாவது:-

கிளிநொச்சி வங்கிக்கொள்ளையின்போது கடமையிலீடுபட்டிருந்த இராணுவவீரர் கொலை செய்யப்பட்டதும் கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும்.

### அஹிம்சை வழியைப் பின்பற்றும் எமக்கு

இச்சம்பவம் நம் எல்லோரையும் அதிரவைத்துவிட்டது. மகாத்மா காந்தி காட்டிய அஹிம்சா வழியைப் பின்பற்றும் எமக்கு இச்சம்பவம் பேரதிர்ச்சியைத் தந்துள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் நிமிடத்திற்கு நிமிடம் பரப்பப்படும் வதந்திகள் மக்களுக்குத் திகிலையும் பீதியையும் ஏற்படுத்துகிறது.

கொள்ளைச் சம்பவத்தின் போது உயிரிழந்த இராணுவ வீரரின் குடும்பத்தினருக்கு எனது சார்பிலும் எனது தொகுதி மக்கள் சார்பிலும் அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு இச்சம்பவத்தைக் கண்டிக்கும் அதே வேளையில் கொள்ளையிடப்பட்ட நகைகளை மீட்க நாலும் எனது மக்களும் பூரண ஒத்துழைப்பு வழங்குவோமென என உறுதி அளிக்கிறோம். (இ)

## கூட்டணித் தலைவர்கள் வேண்டுகோள்

கொழும்பு

'கிளிநொச்சியில் இடம் பெற்ற மக்கள் வங்கிக்கொள்ளையையும், அப்போது ஒரு இராணுவ வீரர் கொலைப் பட்டதையும் வன்மையாகக் கண்டித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரமும், செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கமும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிள்ளனர்:

தமிழ் மக்கள் இதுபோன்ற செயல்களை ஏற்கமாட்டார்கள்; வன்செயல்கள் இவர்களது அரசியல் குறிக்கோள்களை அடையும் விஷயத்தில் முன்னேற்றம் காணச் செய்யா. ஆனால் இச்செயல்களின் விளைவாக அப்பாவிப்பொதுமக்கள் தாக்கப்படுகின்றனர். சட்டமும் ஒழுங்கும் அமைதியும் நிலை பெற அரசிடமும் பாதுகாப்புப்படையிடமும் மக்களிடம் வேண்டுகோள் விடுகின்றோம்.

## பலாத்காரமுயற்சி வழக்கில் 2 இராணுவத்தினர் உட்பட 3 எதிரிகளும் விடுதலை

(மானிப்பாய்புரம்)

இளம் பெண்மீது பலாத்காரம் பிரயோகிக்க முயன்றதாக இரு இராணுவ வீரர்கள் உட்பட மூவர் மீது தொடரப்பட்ட வழக்கில எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

கட்டுவன்சேர்ந்த பெண் ஒருவரைப் பலாத்காரம்செய்ய முயன்றதாக ஏழாலையைச் சேர்ந்த நாகலிங்கம் சிதம்பரநாதன் இ.போ.ச.ஊழியர் பலாலி இராணுவ முகாம் இராணுவ வீரர்களான எச். ஆர். அலபிராட் பிரேமரத்தின, கே. டபிள்யு குமாரசேன ஆகியோர்மீது சுன்னாகம் பொலிசார் இவ் வழக்கை தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு பல தடவை மலாகம் நீதிமன்றத்தில் விசாரணைக் கெடுக்கப்பட்ட போதும் வழக்காளி தரப்பினர் விசாரணைக்குச் சமுகமளிக்கவில்லை.

மீண்டும் இவ்வழக்கு மலாகம் பதில நீதிபதி திரு. கே. குணரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம் எதிரிகளை விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது

இதில சம்பந்தப்பட்ட இராணுவ வீரர்கள் இச்சம்பவம் காரணமாக பல மாதங்களாக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதால விசாரணையை மேலும் தாமதிப்பது நலலதலல என்றும் எதிரிகளான இராணுவ வீரர்கள் சார்பில ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செலவரத்தினம் தெரிவித்தார்.

இறுதியில முதலாம் எதிரி வெளிநாடு சென்றதால அவர் நீதிமன்றத்திற்கு வரவில்லை என தெரிவிக்கப்பட்டதால ஆஜராகவில்லை ஏனைய 3எதிரிகளையும் பதில நீதிபதி விடு

2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எம். ஸ்ரீதரனும், 3ம், 4ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினமும் ஆஜராகினர். (இ)

## கொள்ளையர்பற்றித் தகவல் தந்தால் ரூ. 10 லட்சம் சன்மானம்

(கொழும்பு)

கிளிநொச்சியில் நடைபெற்ற மக்கள் வங்கிக் கொள்ளைசம்பந்தமாக தகவல்தருவோருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என பொலீஸ் தலைமைக்காரியாலயம் அறிவித்துல்லது. நாட்டின்வரலாற்றில் இதுதான் மிகப்பெரிய கொள்ளை என்றும் இக்கொள்ளையை மேற்கொண்டவர்களுக்கு வங்கி நடைமுறைகளிலும் நல்ல தேர்ச்சி உடையவர்கள் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## சிறப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சோதிட ஆய்வு மன்றத்தின் சிறப்புக் கூட்டம் இன்று ம. ஊ. நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. (கெ)

## விவாக.....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவாக கூறப்போனால் மேடம், மிதுனம், தனு ராசிக்காரர்களுக்குத்தான் குருமாற்றம் நன்று என்று துணிந்து கூறலாம். அடுத்தபடியாக தமிழ்மாதமாகிய ஐப்பசி மாத பிறந்தவர்கட்கு சிறப்பான பலனைக்கொடுக்கும். ஏனையோருக்குக் குறைந்த பலனே; அவை பின்வருமாறு;-

### மேட ராசி:-

வியாழ பகவான் 7ம் ராசியில் தாம்பரமூர்த்தியாகப் பயணம் செய்வதால் தடைபட்ட காரியங்கள் கைகூடும். பண வருவாய் சுமாராயிருக்கும். கடந்த வருடம்போல் கடன் தொல்லைகள் அதிகமிராது. புத்தியைக் குறிக்கும் வியாழன் ஜென்மராசியைப் பார்ப்பதால் சட்டத்துறையில் ஈடுபடுவோர் வெற்றி காண்பர். புத்திரர்களின் உதவி, திருப்திகரமாராயிருக்கும். புத்திரர்களின் முன்னேற்றம் சிறப்பாகவிருக்கும். மகிழ்ச்சிகரமாக இல்லற வாழ்க்கை அமையும் இதுவரை காலமும் தடைபெட்ட காதல், விவாகம் என்பன கைகூடும் உற்றார், உறவினர்கள் உறவு கொண்டாடுவர். அரசாங்கத்தில் வேலைபார்ப்போர் சாதகமான பலனை எதிர்பார்க்கலாம். மாணவர் பரீட்சையில் சித்தியடையலாம். கல்யாணர்வம் கொண்டவர்களுக்கு புகழ், கீர்த்தி கிட்டும். தெய்வீக வழிபாட்டால் எல்லாம் நன்மையாக முடியும். ஆரோக்கியம் சீரடையும். விவசாயிகள் ஓரளவு நற்பலனடைவார்கள்.

### இடப ராசி:-

குரு சுவர்ணமூர்த்தியாக 6-ம் இராசியில் சஞ்சாரம் செய்வதால் இவர்களுக்கு நற்பலனும், தீயபலனும் சேர்ந்தே காணப்படும். தொழில் வாய்ப்புகள் தாமாகவே கிடைக்கும் தேகசுகம் இடையிடையே பாதிப்புறும். கடன் தொல்லைகள் இருந்தாலும் வியாழன் மூர்த்தி பலமடைந்திருப்பதால் சமாளித்துவிடுவார். தொழிலாளிகள் கடினமாக உழைத்தாலும் வருமானம், ஊதியம் குறைவாகவே கிடைக்கும். அரசாங்கத்துடன் தொடர்புடையோருக்கு பிரச்னைகள் தீர வழியில்லை. இல்லற வாழ்க்கையில் சந்தோசம் குறைவாகவே இருக்கும். விவசாயிகள் இலாபம் அதிகம் பெறமாட்டார்கள் விவாகப் பேச்சுக்கள் வெற்றி அளிக்க வாய்ப்பில்லை. மாணவர்கள் கல்வியில் அதிக ஊக்கமும், உற்சாகமும் காட்ட வேண்டி வரும்.

### மிதுன ராசி

வியாழபகவான் இரஜதமூர்த்தியாக 5-ம் வீட்டில் பவனி வருவதால் மிகவும் விசேட பலன்களை எதிர்பார்க்கலாம். ஆரோக்கியம் சீராக இயங்கும் குடும்ப வருமானம் திருப்தியாக இருக்கும். இல்லறத்தில் மகிழ்ச்சி பொங்கும் தொழில் தேடுபவர்களுக்கு தொழில் வாய்ப்புக் கிட்ட பலனுண்டு. சமூகத்தில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும் கடன் பாக்கி சம்பந்தமான பிரச்சினைகள் ஒரு முடிவுக்கு வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நல்ல மாற்றங்கள் பதவி உயர்வு என்பவற்றை எதிர்பார்க்கலாம். கல்வி கற்போர் பரீட்சையில் சித்தியடைவார்கள் வியாபாரிகள் முதலீடு செய்வதற்கு வியாழ பகவான் பெருமளவு உதவி செய்வார். இலாபம் உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும். விவசாயிகளுக்கு சனீஸ்வரன் 4-ம் இடத்தில் இருந்து வேதனை தந்தாலும் வருவாய் நிச்சயம்உங்களுக்கு திருப்தியாகக் கிடைக்கும் மொத்தத்தில் இந்த இராசிக்காரர்களுக்கு "தொட்டதெல்லாம் பொன்னாகும்" காலம்.

(தொடரும்)

## உலக உணவுதினத்தை பட்டினியிலிருந்து மக்களை காக்கவே அனுஷ்டிக்கிறோம்

(யாழ்ப்பாணம்)

"மக்களை பசி - பட்டினி போஷாக்கின்மை ஆகிய வற்றிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கைகளை ஏற்படுத்தும் நோக்கமாகவே உலக உணவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

சமூகநல சேவைத்திணைக்களமும் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் ஒன்று சேர்ந்து யாழ் மாவட்டத்தில் சேர்ந்து தொடர்ச்சியாக உலக உணவு தினக் கருத்தரங்குகளை நடாத்தி வருகிறது.

திருநெல்வேலி கமத்தொழில் பண்ணையில் நடைபெற்ற முதலாவது கருத்தரங்கில் உரைநிகழ்த்திய திரு. பஞ்சலிங்கம் பேலும் பேசுகையில் கூறியதாவது:-

"நீர் வளத்தை மக்கள் கவனமாகப் பேணுதல்வேண்டும். சிறுநீர்ப்பாசனம், வாய்க்கால்கள், குளங்கள் ஆகியவற்றை சிரமதானமூலம் திருத்தி உணவுப்பயிர் அபிவிருத்தியில ஈடுபடவேண்டும்.

"தென்னை வளர்ப்பு, மரம் நாட்டும் இயக்கம் போன்றவற்றை ஊக்குவித்து நமது சுயதேவையில தன்னிறைவு காணவேண்டும்."

சமூகநலசேவை உதவி ஆணையாளர் திரு. கே பரமலிங்கம், விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. சிவமுத்துலிங்கம் ஆகியோரும் இக்கருத்தரங்கில உரையாற்றினர். (மா)

## தனியார் வாகன சங்கத் தேர்தல் நடைபெறவில்லை

(யாழ்ப்பாணம்)

வடமாநில தனியார் வாகன சேவை சங்கத்திற்கு யாப்பு ஒன்றை இயற்றுவதற்கு சட்டத்தரணி எஸ். எஸ். பிரான்சிஸ் தலைமையில் பதினைந்து பேர் கொண்ட குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. புதிய யாப்பு அமைக்கப்படும் வரை முன்பிருந்த தலைவர், செயலாளர் ஆகியோருடன் செயற்குழுவும் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"கடந்த பதின்மூன்றும் திகதி வடமாநில தனியார் வாகன சேவைச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சங்கத்தலைவர் திரு ஏ. பி.வால் மீண்டும் ஏகமனதாகத் தெரிவானார் என்றுஈழநாடுஇதழில் செய்தி வந்திருந்தது அன்று அங்கத்தவர் தெரிவு இருந்தும் எல்லா வாகன உரிமையாளர்களும் இல்லாத காரணத்தலும் மேற்படி சங்கத்திற்கு யாப்பு இல்லாத காரணத்தாலும் அன்று பிரசன்னமாகி இருந்தோரின் பெரும்பான்மையோரின் வேண்டுகோளுக்கிணங்க அங்கத்தவர்கள் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. முன்பிருந்த தலைவர் செயலாளர் ஆகியோருடன் செயற்குழுவும் மறுதேர்தல் வரை தொடர்ந்து இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கல்வி வெள்ளை அறிக்கை சம்பந்தமான கருத்தரங்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இன்று நடைபெறவிருக்கிறது.

இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்ட கிளை இக்கருத்தரங்கை நடாத்துகிறது. (மா-இ)

## போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்

யாழ். அமைச்சூர் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இம்மாதம் 31-ம் திகதியும், நவம்பர் 1-ம் திகதியும் நடைபெறவிருந்த இப்போட்டி நவம்பர் 14-ம், 15-ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

## பயிர்நஷ்டம் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

"கட்டாக்காலி ஆடு, மாடுகளின் சொந்தக்காரர் மீது கமநல சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது என்று கமநல சேவை உதவி ஆணையாளர் திரு கே பரமலிங்கம் தெரிவித்துள்ளார்

அறுவடை முடியும்வரை ஆடு-மாடுகளின் உரிமையாளர்கள் அவற்றைக் கட்டிவைக்கவேண்டும், கட்டாக்காலிகளாக அவற்றை விடும் பட்சத்தில அவற்றின்சொந்தக்காரர் மீது பயிர்நஷ்டம் அறவிடப்படுமென்றும் தெரிவித்த ஆணையாளர், கட்டாக்காலிகளை விற்று அந்த நஷ்டத்தை அறவிடுவதற்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

கட்டாக்காலி ஆடுமாடுகளின் தொல்லை பற்றி விவசாயிகள் புகார் தெரிவித்ததைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார், (மா-இ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சினன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 25-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper. The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 889, 8126.